[982 பிப்ரவரி 11]

திரு. கி.சட்டநாத கரையாளர் : தலைவர் அவர்களே, வாசக்டமி செய்வதற்கும் மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் பர்க்னன்ஸி செய்வதற்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி என்ன வைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்கு டிரெயினிங் இருக்கிறது. எம்.பி.பி.எஸ். படித்திருக்க வேண்டும், டி.ஜி.ஓ. படித்திருக்க வேண்டும் எம்.பி.பி.எஸ். படித்திருந்தாலும், டி.ஜி.ஓ. படித்திருந்தாலும் அதற்கென்று இன்சர்விஸ் டிரெயினிங் கொடுத்து தான் அதைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

கோவை நகரிலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி.

* வினா எண். 151—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரத்தில் உள்ள ஆரிய வைத்திய பார்மஸி என்ற ஆயுர் வைத்திய நிறுவனம் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்துகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள் ?

(இ) அக்கல்லூரிக்கு அரசு கொடுக்கிற உதவிகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆம்.

(ஆ) 68 மாணவர்கள்.

(இ) இந்தக் கல்லூரிக்கு,இம்மாநில அரசு இதுவரை எவ்வித நிதி உதவியும் வழங்கவல்லை.

திரு., கு. ரமணி : : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆயுர்வேத வைத்திய முறை வளர்ந்து வருவதற்கு பயிற்சி பெற்ற மருத்துவர்களை உருவாக்குவதற்கு இந்தக் கல்லூரி முதன் முதலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்தக், கல்லூரிக்கு அரசு நிதி உதவி ஏன் செய்யாமல் இருக்கிறது ? அவர்களிடத்திலேயிருந்து அதைப்பற்றி அது சம்பந்தமாக வேண்டுகோள் வரவில்லையா அல்லது அரசே ஆயுர்வேத வைத்திய முறைக்கு செய்யத் தேவையில்லை என்று முடிவுக்கு வந்துவிட்டதா ?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யுனானி வைத்தியம் ஆகியவற்றை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே அவர்கள் நமக்கு ஒரு கருத்தை அனுப்பியிருக்கிறார்கள்.

The Ayurvedic Trust, Coimbatore has sent a proposal to the Government of India, Ministry of Health and Family Welfare through the State Government for sanction of a capital grant of Rs. 2 lakhs for constructions of an Outpatient Wing. The remarks of the Director of Indian Medicine have been called for. They are considering the matter. Taking into consideration the Hon.'ble Member's opinion it will be considered sympathetically.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி நமது அரசின் மூலமாகவே மத்திய அரசுக்கும் வேண்டுகோள் விடுத்து மத்திய அரசினுடைய உதவிகள் கிடைத்துள்ளது. அது மாத்திரமல்ல. இன்றைக்கு ஆயுர்வேத வைத்திய முறை வளர்ந்து வருகிற முறை. அதிலே சில விசேஷமான வைத்தியங்கள் செய்யப்படும் என்பதை அறிந்து உலக சுகாதார ஸ்தாபனம் அவர்களைக் கலந்து ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அளவுக்கு அதற்கு உதவி செய்வதற்கு, அதை அபிவிருத்தி செய்வதற்கு நிதி உதவியும் மற்ற இதர உதவிகளும் செய்ய அரசு முன்வருமா ஹோமியோபதி சித்தா போன்ற வைத்திய முறைக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு நல்ல கண்ணோட்டத்தோடு நல்ல நோக்கத்தோடு ஆயுர்வேத முறைக்கு உதவி செய்யப்படுவதில்லை என்ற கருத்து நிலவுவதை இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அப்படிப்பட்ட கருத்து இல்லாமல் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும், மேற்கொண்டு வருகிறது என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த நிறுவனம் என்னென்ன தேவை என்று நம்மிடத்திலே கேட்பார்களோ—பணத் தேவை மட்டும் கிடையாது, அதைக் கேட்கவில்லை—அவர்கள் கேட்டதெல்லாம் அங்கே வேலைகள் செய்ய எந்தவிதமான இடையூறுகளும் இருக்கக் கூடாது என்று ரெப்ரசண்டேஷன் மூலம் தெரிவித்து, அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களும் செய்ய ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982 பிப்ரவரி 11]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரிய வைத்திய பார்மஸி என்ற நிறுவனம் உலகத்திலேயே புகழ்பெற்ற நிறுவனம் என்பதையும், அதன் தலைமை கேரளாவிலிருந்து கோவைக்கு, அதாவது தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்பதையும் கருத்திற் கொண்டு, அந்தக் கல்லூரிக்கு உதவி கொடுப்பது என்பது தமிழக அரசானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் செய்யக்கூடிய பாக்கியம் என்று கருதி அமைச்சரவர்கள் அதிக உதவியைச் செய்து அந்தக் கல்லூரியை ஊக்குவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிறுவனம் ஏதாவது திட்டவட்டமாக இப்படிப்பட்ட உதவி தேவை என்று நம்மிடத்தில் அணுகுவார்களேயானால் அதைப்பற்றி நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 152— திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) கூகலூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக ஆணை பிறப்பித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கே அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாகத் துவக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அதற்காக

The Government sanctioned a total expenditure of Rs. 17·28 lakhs under recuring and Rs. 96.49 lakhs under non-recurring The total expenditure of the Scheme for 1981-82 has been restricted to 71·19 lakhs.